தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை

IDB

# விலைமனுதாரர்களுக்கான அழைப்பு

## “வியாபார இன்கியூபேட்டர் திட்டத்திற்காக (National industrial Product Development & Tooling Centre- Katubedda)”

## கைத்தொழில் இயந்திரங்கள் மற்றும் பரிசோதனை உபகரணங்களை

## வழங்குதல், நிறுவுதல் மற்றும் இயங்கவைத்தல்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (IDB) “வர்த்தக அடைகாப்பகங்களை நிறுவும் “(National industrial Product Development & Tooling Centre- Katubedda)” திட்டத்திற்காக பின்வரும் கைத்தொழில் இயந்திரங்கள் மற்றும் பரிசோதனை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் (மேஜர்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| | | |
|---|---|---|
| விலைக்கோரல் இல | : | T/19/2026 |
| விலைமனுவின் பெயர் | : | “வர்த்தக அடைகாப்பகங்களை நிறுவுதல் “(National industrial Product Development & Tooling Centre- Katubedda)” திட்டத்திற்காக கைத்தொழில் இயந்திரங்கள் மற்றும் பரிசோதனை உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் இயங்கவைப்பதற்கான பெறுகை |
| விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் திகதி | : | 2026-10-12ஆம் திகதி 2026-10-30ஆம் திகதி வரை மு.ப. 9:00 மணி முதல் பி.ப. 3:00 மணி வரை |
| ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | : | வழங்கல் பிரிவு - IDB தலைமை அலுவலகம் |
| விலைமனு ஆவணக் கட்டணம் | : | ரூ. 15,000.00 (மீளளிக்கப்படாத கட்டணம்) |
| விலைக்கோரல் பிணை முறித் தொகை | : | அண்மைய பத்தாயிரம் ரூபாவை முழுமையாக்கும் மொத்த விலைக்கோரல் பெறுமதியின் 1.5% |
| விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் திகதியும் நேரமும் | : | 2026-11-02ஆம் திகதி மு.ப. 11:30 மணிக்கு |
| விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் | : | 2026-10-20ஆம் திகதி மு.ப. 10:00 மணிக்கு - பணிப்பாளர் சபை அறை, IDB தலைமை அலுவலகம் |

| இல. | கைத்தொழில் இயந்திரங்கள் மற்றும் பரிசோதனை உபகரணங்களின் விபரம் | அளவு |
|---|---|---|
| 01. | Pressure Die Casting Machine (Cold Chamber/Brass &Aluminium Based) | 01 |
| 02. | Surface Grinding Machine | 01 |
| 03. | Endmill and Drill Bit Grinding Machine | 01 |
| 04. | Professional 3D Scanner | 01 |
| 05. | Industrial Bench-Drill Machine (Chuck Size-16mm) | 01 |
| 06. | Industrial Bench Drill Machine (Chuck Size-20mm) | 01 |
| 07. | NC Lathe Machine | 01 |
| 08. | Computer Control Safety Valve Test Bench | 01 |
| 09. | Flue Gas Analyzer and Printer Kit | 01 |
| 10. | Industrial Sound Level Tester | 01 |
| 11. | Thermal Camera (for Non-contact Thermal Inspection) | 01 |
| 12. | Power Quality and Energy Analyzer | 01 |

1. விலைமனுக் கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் (NCB) ஊடாக நடத்தப்படும்.
2. ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மொறட்டுவ, கட்டுபெத்த, இல. 615, காலி வீதி, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, உதவிப் பணிப்பாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2026-10-12ஆம் திகதி முதல் 2026-10-30ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனு ஆவணங்களை (இயந்திரங்கள் மற்றும் பரிசோதனை உபகரணங்களின் விபரக்குறிப்புகள் உட்பட) IDB இணையதளமான www.idb.gov.lk மற்றும் தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சின் இணையதளமான www.industry.gov.lk ஆகியவற்றில் பார்வையிடலாம் (பார்வையிடும் நோக்கத்திற்காக மட்டுமே).

   ஆனால் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணத்தையே கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும். தொடர்புகளுக்கு: 011-2607004 (உதவிப் பணிப்பாளர் - வழங்கல்), 011-2605319 (பொறியியல் பணிப்பாளர்) அல்லது 011-2605326, 7 (IDB பொது).
3. ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி ஆகிய இரண்டும்) கட்டுபெத்த IDB தலைமை அலுவலகத்தில் உள்ள வழங்கல் பிரிவின் உதவிப் பணிப்பாளரிடமிருந்து 2026-10-12ஆம் திகதி முதல் 2026-10-30ஆம் திகதி வரையில் (அரச வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வரை பெற்றுக்கொள்ளலாம்.

   3.1 ஒரு விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தை கொள்வனவு செய்ய வரும்போது, நிறுவனத்தின் பெயர், நிறுவனப் பதிவு இலக்கம், விலைக்கோரல் எண் மற்றும் விலைக்கோரலின் பெயர் ஆகியவற்றை உள்ளடக்கிய “நிறுவனக் கோரிக்கை கடிதத்தை” “தலைவர், திணைக்கள கொள்முதல் குழு (மேஜர்)” அவர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

   மற்றும்

   3.2 விலைமனு ஆவணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன், விலைமனுதாரர் மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000.00 ரூபாவைச் செலுத்த வேண்டும் (கட்டணம் பணமாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்).
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி சகிதம்) 2026-11-02ஆம் திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன் கட்டுபெத்த IDB தலைமை அலுவலகத்தில் உள்ள தலைவர் அலுவலகத்திற்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட வேண்டும் அவ்வாறல்லாவிட்டால் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (முதன்மை), இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்ட உடனேயே, IDB தலைமை அலுவலகத்தின் பணிப்பாளர் சபை அறையில், கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் விலைக்கோரலின் பெயர் என்பன குறிப்பிடப்பட வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. அனைத்து ஏலங்களுடனும் 2027 மார்ச் 01ஆம் திகதி வரை செல்லுபடியாகும் விலைக் கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை,**
**இல. 615, காலி வீதி, கட்டுபெத்த,**
**மொறட்டுவ.**
**தொலைபேசி / தொலைநகல் - 011-2607004**